***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXV BNSS)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT Mannargudi***
***CC.No. 210/2022 – P.W.6 (LW7)***

| | |
|---|---|
| *Name* | திவாகரன் உதவி பேராசிரியர்<br>எலும்பு முறிவு மருத்துவர்<br>திருவாரூர் மருத்துவகல்லூரி மருத்துவமனை |
| *Father/Husband's Name* | |
| *Village* | |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | *37* |

*2,3 வது* **எதிரிகள் ஆஜர். 1,4 வது எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 11.06.2026.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் திருவாரூர் மருத்துவகல்லூரி மருத்துவமனையில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன்.

கடந்த 17.01.2019 ம் தேதியன்று இரவு 10.40 மணியளவில் மன்னார்குடி அரசு மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் உதவி அறுவை சிகிச்சை நிபுணராக பணியில் இருந்தபோது 36 வயது மதிக்க தக்க தங்கராசு என்பவரின் மகன் வீராச்சாமி என்பவர் அவரது வீட்டின் அருகில் அன்றையதினம் சுமார் மாலை 06.45 மணியளவில் தன்னை 6 தெரிந்த நபர்கள் இரும்பு கம்பியால் தலையிலும், நெஞ்சியிலும் தாக்கியதாக கூறி சிகிச்சைக்கு வந்தவரை நான் உள்நோயாளியாக அனுமதித்து விபத்து பதிவேடு பதிவு செய்து அவரை பரிசோதித்தபோது அவர் சுயநினைவுடன் இருந்தார்.

அவருக்கு 1) தலையில் இடது பக்கத்தில் 7X1X1 CM அளவில் கிழிந்த காயம் இருந்தது.
2) இடது கை முழங்கை மூட்டில் 2X1CM அளவில் கிழிந்த காயம் இருந்தது.

3) அவரது இடது முட்டியிலும் வலது நெஞ்சு பகுதியிலும் 3X3 CM அளவில் சிராய்ப்பு காயம் இருந்தது. வேறு எந்த காயங்களும் காணப்படவில்லை.

அவரை உள்நோயாளி அனுமதிக்க பரிந்துரைத்தேன். அவருக் குஏற்பட்ட காயமானது சொற்பகாயம் என்று சான்று வழங்கினேன். **மேற்படி விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அசா.ஆ-3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

காயம்பட்டதாக சொன்னதாக என்னிடம் சொன்னது மாலை 06.45 மணி தான் என்றால் சரிதான். மருத்துவமனைக்கு நோயாளி 4 மணி நேரம் காலதாமதமாக வந்தார் என்றால் சரிதான். இந்த காயத்தினுடைய வயது, தன்மை, நிறங்கள் குறித்து ஏதேனும் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. மேற்படி காயங்கள் அனைத்தும் கீழே விழுந்தால் கூட இந்த காயங்கள் ஏற்படுவதற்கு வாய்ப்பு உண்டா என்றால் உண்டு.

**Sd/--J. Tamizhmurugan,**

**Judicial Magistrate No.I,**
**Mannargudi.**